வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு, போக்குவரத்திற்கு வசதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், பள்ளிகொண்டா-பலமனேரி சாலையில் பாலாற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கி.. தருமலிங்கம், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை,. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் அணைக்கட்டுத் தொகுதி, பள்ளிகொண்டா-பலமனேரி சாலையில் பாலாற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பள்ளிகொண்டா-பலமனேரி சாலை நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டுவரும் ஓர் அரசு பெரிய மாவட்ட சாலையாகும். இச்சாலை கி.மீ. 1/4–8-ல் பாலாறு 534 மீட்டர் நீர்வழிப்பாதை அகலத்துடன் குறுக்கிடுகிறது. இவ்விடத்தில் தற்போது வெட்டுப்பாதைகள் பரத்தப்பட்ட ஒரு தரைமட்ட தாம்போகி அமைந்துள்ளது. மழைக்காலங்களில் இந்த தரைமட்ட தாம்போகி பழுதடைந்து போக்குவரத்திற்கு உபயோகப்படாமல் போகின்றது. போக்குவரத்தும் தடைப்பட்டுவிடுகின்றது. எனவே இவ்விடத்தில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டவேண்டியது அவசியமாகும். இவ்விடத்தில் ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்க சுமார் ரூ. 400 இலட்சங்கள் தேவைப்படும். இவ்விடத்தில் உயர்மட்ட பாலம் கட்டும் பணி மைய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்ட மைய சாலைநிதி திட்டப் பிரேரேபணையில் முதல் பணியாக இடம்பெற்று உள்ளது. மைய அரசு ஒப்புதல் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் இப்பாலம் கட்டும்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் அந்தப் பாலத்தின் கட்டுமானப் பணி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும், அந்தப் பாலத்தை மேம்பாலமாகக் கட்டுவதற்கு 400 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்பதையும், அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு மைய அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். அதற்கு நான் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தப் பணிகுறித்து மைய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளதால், அந்தப் பகுதி மக்கள், இப்பணி இன்று நடைபெறுமா, அல்லது நாளை நடைபெறுமா அல்லது 4 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறுமா என்ற ஐயப்பாட்டிற்கு வந்துள்ளார்கள். எனவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், இது மிகவும் முக்கிய சாலையாதலால் இந்தச் சாலையின் வழியாக தென்மாநிலங்களிலிருந்தும் குறிப்பாக ஆந்திரம், கர்னாடகம் மற்றும் ஏனைய வட மாநிலங்களிலிருந்தும் விவசாய விளைபொருள்களை எடுத்துச்செல்லக்கூடிய வகையில் ஒரு முக்கிய சாலையாதலால், நம்முடைய தமிழக அரசின் நிதியிலே அதற்கு முன்னுரிமை தந்து, அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித்தந்து, அந்தப் பாலத்தில் போக்குவரத்து உடனடியாக நடைபெற வழிவகை செய்வார்களா என்கிற அவருடைய எண்ணத்தை தங்கள் மூலமாக ஈர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற அனைத்து விவரங்களையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லி இருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த தாம்போகி தரைமட்ட பாலத்தை உயர்மட்ட பாலமாகக் கட்டவேண்டுமென்பதுதான் நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள். அப்படிக் கட்ட வேண்டுமென்றால், 4 கோடி ரூபாய் மதிப்பீடு வருகிறது. ஆகவே, அதை நம்முடைய திட்டத்திலே எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால், 'சென்ட்ரல் ரோட் ஃபண்ட் ஸ்கீம்' என்று சொல்லப்படுகிற அந்தத் திட்டத்திலே அதைச் சேர்த்து, மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறோம். தற்போது போக்குவரத்திற்கு பாதிப்பு இல்லாத அளவுக்குப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நம்முடைய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுக்கு அரசின் சார்பிலே ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பாலம் மிக அவசியம் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. இருக்கிற நிதியாதாரத்தைப் பொறுத்துத்தான் இப்போதிருக்கிற பிரச்சினை. எனவே, இதுசம்பந்தமாக மைய அரசினுடைய ஒப்புதலைப் பெற்று, அந்த 'சாலை நிதித் திட்டத்'திலே அதைச் சேர்த்து, வருகிற காலங்களிலே நிதிநிலைக்கேற்ப அதை உயர்மட்ட பாலமாகக் கட்டுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.